# திருமலையம்பாளையம் பேரூராட்சி

## கோயம்புத்தூர் மாவட்டம்

## ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

**ந.க. எண். 436/2021** **நாள் : 28.03.2022**

கோயம்புத்தூர் மாவட்டம், திருமலையம்பாளையம் பேரூராட்சியில் கீழ்க்கண்ட வேலைகளை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் திருமலையம்பாளையம் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 19.04.2022 பிற்பகல் 03.00 மணியளவில் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 19.04.2022 மாலை 03.30 மணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். மேற்படி வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விலை, விற்பனைவரி மற்றும் டெண்டர் டெபாசிட் ஆகியவை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதை பேரூராட்சி அலுவலகத்தில் 18.04.2022 மாலை 4.00 மணிவரை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கண்ட நமூனா தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஒப்பந்த ஆவணங்கள், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, சால்வன்சி தொகை மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

**இயக்கம் மற்றும் பராமரிப்பு 2021–2022**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | செலுத்த வேண்டிய வைப்பு தொகையில் (1%) ரூ. |
|---|---|---|---|
| 1 | திருமலையம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட குட்டிகவுண்டன்பதி **1.00** லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் மாஸ்திகவுண்டன்பதி **60,000** லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி பழுது பார்த்தல் பணி மேற்கொள்ளுதல். | 9.00 | 9000 |

**(ஒம்) x x x x x**
**தலைவர்**
திருமலையம்பாளையம் பேரூராட்சி
கோயம்புத்தூர் - 641 032.

**(ஒம்) x x x x x**
**செயல் அலுவலர்**
திருமலையாம்பாளையம் பேரூராட்சி
கோயம்புத்தூர் - 641 105.

/ உண்மை நகல் /

செயல் அலுவலர்
திருமலையம்பாளையம் பேரூராட்சி
கோயம்புத்தூர்–641 105